[திரு. மீ. கலியாணசுந்தரம்] [3rd November 1965

MR. SPEAKER : I associate myself with the sentiments expressed by the Hon. Leader of the House and the other Leaders of Parties. By way of passing the Resolution and as a mark of respect to the departed souls. I request all the hon. Members to stand in silence for two minutes.

The resolution was carried *nem con* all the Members standing in silence for two minutes.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மதுரை வேளாண்மைக் கல்லூரி

*222 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை அருகே உள்ள வேளாண்மைக் கல்லூரியைச் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பது பற்றிப் பரிசீலிக்க பல்கலைக்கழக ஆய்வுக்குழு ஒன்று கல்லூரிக்கு சமீபத்தில் வந்தது உண்மையா ?

(இ) ஆம் என்றால், விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) மதுரை வேளாண்மைக் கல்லூரியில் இந்த ஆண்டிலிருந்தே முதலாண்டு பி. எஸ்சி. (வேளாண்மை) வகுப்பைத் தொடங்குவதற்குத் தேவையான இணைப்பிற்குச் சென்னைப் பல்கலைக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

(*a*) The answer is in the affirmative;

(*b*) The University of Madras has granted affiliation for starting the first year of B.Sc. (Agri.) course at the Agricultural College, Madurai this year itself.

திரு. செ. மாதவன் : இந்தக் கல்லூரியில் முதல் திட்டமாக எத்தனை மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலில் 80 மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : இந்தக் கல்லூரிக்காக ஊர்ஜிதம் செய்யப்பட்ட மொத்த ஏக்கர் நிலம் எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : சர்க்காருக்குச் சொந்தமான நிலம் 100 ஏக்கர் ; பக்கத்தில் 200 ஏக்கர் நிலம் அக்வயர் செய்யப்பட்டிருக்கிறது. மொத்தம் 300 ஏக்கர் நிலம் இந்தக் கல்லூரிக்காக இருக்கிறது.

திரு. கோ. சி. மணி : அக்வயர் செய்யப்பட்ட நிலங்கள் அவ்வளவும் சாகுபடிக்குத் தகுதியானவையாக இருக்கின்றனவா ?

3rd November 1965]

கனம் திரு. பூ. கக்கன் : பெரும்பகுதி நஞ்சை நிலம்தான் அக்வயர் செய்யப்பட்டிருக்கிறது. புஞ்சை கொஞ்சந்தான். பொதுவாக சாகுபடிக்கு லாயக்கான நிலங்களைப் பார்த்துத்தான் இந்தக் கல்லூரிக்காகத் தேர்ந்தெடுக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தக் கல்லூரியில் எல்லா ஜில்லா மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களா அல்லது குறிப் பிட்ட சில ஜில்லா மாணவர்கள் மட்டுந்தான் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : எல்லா மாவட்டங்களிலிருந்தும் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். குறிப்பாக, பக்கத்தில் உள்ள திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களி லிருந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. வை. சங்கரன் : கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியை ஒட்டிஃப்புட் கிரெயின்ஸ் சிரியல்ஸ், விஜிடபிள்ஸ் சம்பந்தமாக ரிசர்ச் ஸ்டேஷன் அமைக்கப்பட்டிருப்பது போல் மதுரையிலும் ஆரம்பிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : தென்னாட்டின் நெற்களஞ் சியம் என்று சொல்லப்படும் தஞ்சை ஜில்லாவில் விவசாயக் கல்லூரி அமைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. செ. மாதவன் : இதைப் பற்றிக் குழு ஆய்வு நடத்திய போது கட்டடங்கள் போதா என்ற கருத்தை தெரிவிக்கப்பட் டிருக்கிறது. கட்டடங்கள் கட்டுவதை விரைவு படுத்தத் திட்டம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆரம்பக் கட்டத்தில் கட்டப்பட வேண் டிய கட்டடங்கள் கட்டப்பட்டு விட்டன. யுனிவர்சிடி கமிஷனும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். வெகு சீக்கிரம் இதர கட்டடங் களும் கட்டப்பட்டுவிடும்.

திரு. எஸ். முருகையன் : இந்தக் கல்லூரிக்கு ஜில்லாவாரியாக எத்தனை மாணவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள் ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரை வேளாண்மைக் கல்லூரி யில் கோவை வேளாண்மைக் கல்லூரியின் அடிப்படையில் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா ? சிறப்புக்குரிய வேளாண்மைத் திட்டங்கள் ஏதேனும் மதுரை வேளாண்மைக் கல்லூரியில் புகுத்தப்பட்டிருக்கின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : தற்சமயம் கோவைக் கல்லூரியைப் போன்று இல்லாவிட்டாலும் இறுதியில் அதைப் போன்று ஆக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.